**கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. மு. இராமன், எம். எஸ்சி., எம். எட்.,**

**மூ. மு. எண். 4554/அ1/2020 நாள் 05.09.2020**

*******

பொருள் : பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிக்காலத்தில் காலமான திரு. ம. இசக்கி முத்து என்பவரின் வாரிசுதாரர் திருமதி. இ. ரேவதி என்பவருக்கு 20.02.2014 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – சார்பு

பார்வை :

1. நாகர்கோவில், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க. எண். 11449/அ1/2006 நாள் 19.02.2014
2. அரசாணை (நிலை) எண். 80/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1)த் துறை நாள் 02.03.2016
3. சென்னை – 06, பள்ளிக் கல்வி இயக்குநரின் ந. க. எண். 10228/ஜே2/2014 நாள் 30.03.2016
4. நாகர்கோவில், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க. எண். 5252/அ1/2020 நாள் 27.08.2020

*******

பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம், அரசு மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து பணி காலத்தில் காலமான திரு. ம. இசக்கி முத்து என்பவரின் வாரிசுதாரர் திருமதி. இ. ரேவதி என்பவர் பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக 20.02.2014 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், எஸ். எல். பி. அரசு (ம) உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார்.

பார்வை 2ல் காணும் அரசாணை, பத்தி 6.1 மற்றும் 6.2ல், 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணிவரன்முறை செய்திட ஏதுவாக கீழ்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

(6.1) 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதி தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணிநியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படுகிறது.

(6.2) மேலே, பத்தி 6.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை

செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, பார்வை 2ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, எவ்வித விதி தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததால், கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பணிக்காலத்தில் காலமான திரு. ம. இசக்கி முத்து என்பவரின் வாரிசுதாரர் திருமதி. இ. ரேவதி என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவிக்கான தகுதிகள் பெற்றுள்ளதால், நியமனம் நாளான 20.02.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு, நடைமுறையில் உள்ள சரிபார்ப்பு பட்டியலின்படி கருத்துரு மற்றும் பணிவரன்முறை ஆணை நகல், பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை பதிவு செய்யப்பட்ட பக்க நகல் ஆகியவற்றை உடன் அனுப்ப வேண்டும்.
2. ~~பவானி சாகர் அடிப்படை பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே தொடர்~~ ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
3. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
4. பணிவரன்முறை செய்த விவரத்தை பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2/9/2022

முதன்மைக் கல்வி அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

5/9/20

<u>பெறுநர்</u>
மாவட்டக் கல்வி அலுவலர்,
நாகர்கோவில்.

<u>நகல்</u>
1. தலைமையாசிரியர்,
   எஸ். எல். பி. அரசு (ம) உயர்நிலைப் பள்ளி,
   நாகர்கோவில்.
2. சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக).
3. அலுவலக கோப்பிற்கு.

E:\SECTIONWISE FORMATS\2018\A1\COMPASSIONATE APPOINTMENT - REGULARISATION ORDER.Doc